பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 07 சனிக்கிழமை 23.07.2022 கதிர் 260

### இனிது ரகசியம் அல்ல!

இலங்கை வரலாற்றில் இரத்தக் கறை படிந்த தினங்களின் நினைவு நாளை இன்று கடக்கின்றோம். 1983 ஜூலை 23, 24, 25 ஆகிய தினங்களில் பௌத்த, சிங்கள பேரினவாதம் காட்டேரியாக சன்னதமாடிப் பல்லாயிரம் தமிழர்களின் இரத் ☞2

# தூதர்களை அழைத்து சீறிப் பாய்ந்தார் ரணில்

## முதல் சந்திப்பிலேயே காட்டம்

கொழும்பு, ஜூலை 23

அமெரிக்கா உட்பட முக்கிய பல நாடுகளின் தூதுவர்களை நேற்று மாலை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து அவர்களோடு பேச்சு நடத்திய புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காலிமுகத்திடல் போராட்டம் தொடர்பில் அவர்கள் வெளியிட்ட அறிவிப்புகள் சம்பந்தமாக அவர்கள் மீது சீறிப் பாய்ந்தார் என நம்பகமாக அறிய வந்தது.

"இப்படிப் போராட்டக்காரர்கள் உங்கள் நாட்டில் உங்கள் ஜனாதிபதியின் அலுவலகத்தை சட்ட விரோதமான முறையில் ஆக்கிரமித்துக் கொண்டு அங்கிருந்து வெளியேற மறுத்தால் உங்கள் அரசுகள் அதை அனுமதிக்குமா?" – என்று ஒவ்வொரு தூதுவரையும் பார்த்துக் கேட்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ☞2

## ரணிலின் இடத்துக்கு வஜிர எம்.பியாகிறார்

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமையால் வெற்றிடமான ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வஜிர அபேவர்தனவை நியமித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

## விசாரணைக்குழு ரணில் நியமிப்பு

முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எதிராக ஜப்பானிய நிறுவனத்திடம் லஞ்சம் கேட்டார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தன தலைமையில் மூவரடங்கிய விசாரணைக் குழுவொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

## காலிமுகத்திடலில் அதிகாலை கைதான 9 பேருக்கும் பிணை!



### ஆதரவாகக் கொழும்பு நீதிமன்றத்தில் களமிறங்கியது சட்டத்தரணிகள் படை

கொழும்பு – காலிமுகத்திடலில் அரச படைகள் மேற்கொண்ட அராஜக நடவடிக்கை யின் போது கைதுசெய்யப்பட்ட சட்டத்தரணி நுவான் போபகே உள்ளிட்ட போராட்டக்காரர்கள் 9 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று மாலை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ☞4

## காலிமுகத்திடல் வன்முறை;
## ரணிலை நேரில் சந்தித்து கவலை வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர்!



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று நேரில் சந்தித்தார்.

இது தொடர்பில் அவர் ருவிட்டர் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில், ஒரே இரவில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து தனது ஆழ்ந்த கவலையைத் வெளியிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## இடைக்கால அரசின் புதிய அமைச்சரவை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான இடைக்கால அரசின் புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்றது. பிரதமர் செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 18 பேர் ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

## யாழில் போராட்டம் ஜே.வி.பி. ஏற்பாடு!





காலிமுகத்திடலில் இடம்பெற்ற தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் கண்டன போராட்டமொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ☞2

## புதிய அமைச்சரவையின் முதலாவது கூட்டம் நேற்று

புதிய அமைச்சரவையின் முதலாவது கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது.


பிரதமர் செயலகத்தில் நேற்று முற்பகல் ஜனாதிபதி முன்னிலையில் புதிய ☞2

## ரணில் அரசுக்கு சீனா முழு ஆதரவு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், இலங்கை மக்களுக்கும், அவர்களின் முயற்சிகளுக்கும் தன்னால் இயன்ற சிறந்த ஆதரவையும் உதவியையும் வழங்கத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி ஷி ☞2

## இணக்கமான தீர்வைக் காண வலியுறுத்துகிறார் ஸ்ரீகாந்தா



காலிமுகத்திடல் போராட்டத்தை அடக்குவதற்கு எடுக்கப்பட்டிருக்கும் அவசரத்துடன் இணைந்த அதிரடி நடவடிக்கை முற்றிலும் ஜனநாயக விரோதமானது என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா தெரிவித்திருக்கிறார்.

இவ்விடயத்தை ஒட்டி ☞2

## ரணிலைக் கண்டபடி விமர்சிக்காமல் தந்திரோபாயமாக அணுகவேண்டும்

### முன்னாள் எம்.பி. சிறிநேசன் வலியுறுத்து



தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல்வாதிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதைச் சிந்திப்பதைவிடுத்து இப்போது தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கண்டபடி ☞2

## மன்னிப்புச்சபையும் கண்டனம்

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கடுமையாக கண்டித்துள் சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசிய பிரிவு இது ஏற்றுக்கொள்ள ☞2

AMNESTY INTERNATIONAL

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தத்தை உறிஞ்சிக் குடித்த நினைவழியா நாள்களின் 39 ஆவது வருட நினைவு தினம் இன்று.

வெலிக்கடைச் சிறையில் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட 53 தமிழ்ப் போராளிகள் ஈவு இரக்கமற்ற முறையில் அடித்துப் படுகொலை செய்யப்பட்டு, கண்கள் பிடுங்கப்பட்டு, வயிறுகள் வெட்டப்பட்டு, அவர்களின் குடல்களே அவர்களுக்கு மாலைகளாக்கப்பட்ட கொடூரம், பௌத்த தர்மமாக - பஞ்சசீலக் கொள்கையாக - தர்மிஷ்டர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் அரங்கேறிய காலம் இதுதான்.

அப்படி சிறைக்குள் தாக்க வந்த பேரினவாத இனவெறியர்களை சிறைக் கூண்டுகளுக்குள் முடங்கியபடி, துணிவோடு பதிலடி தந்து, மோதி, வீரத் தழும்புகளோடு உயிர் பிழைத்த தமிழ்ப் போராளிகளும் பலர் உண்டு. அப்படி வெலிகடையில் அருந்தப்பில் தப்பிப் பிழைத்த ஒருவர், நேற்று ரணிலின் அரசில் சிரேஷ்ட அமைச்சராகப் பதவி ஏற்றிருக்கிறார். அவர் வேறு யாருமல்லர். டக்ளஸ் தேவானந்தாதான்.

நேற்றுப் பிரதமர் தினேஷ் குணவர்த்தனாவை அடுத்து பதவியேற்ற 'சீனியர்' அமைச்சர் அவர்தான். டலஸுக்குப் பின்னால் போகும் முடிவை சுமந்திரன் அணி எடுத்தமையினால் ரணிலுக்கு நெருக்கமாகும் பேறு டக்ளஸுக்குக் கிட்டி இருக்கிறது என்பதுதான் உண்மை.

தேசியம் பேசும் தரப்புகளின் – தலைமைகளின் – சித்தாந்தங்கள், தந்திரங்கள், உத்திகள், புத்திசாதுரியம், கொள்கைப் பற்றின் மீதான நியாயங்கள் குறித்துத் தமிழர்கள் தீர்மானம் எடுக்க வேண்டிய காலகட்டம் இது.

'கோட்டா கோ கம' கொழும்பில் பெரும்பாலும் முடிந்து விட்டது. ஆனால் 'கூட்டமைப்பு கோ கம' வடக்கு, கிழக்கில் ஆரம்பமாகாமல் பார்த்துக் கொள்வது கூட்டமைப்பு தலைவர்களின் பொறுப்பு.

தமிழ்த் தலைமைகள் என்ன நியாயமும் பிளக்கலாம். ஆனால் அவை தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் கருத்தியலையும் உள்வாங்கி அதற்கேற்ப இயங்குகின்றார்களா அல்லது தங்களின் தனிப்பட்ட தான்தோன்றித்தனமான எண்ணப் போக்கில் – பிடிவாதச் சிந்தனையில் – இயங்குகின்றார்களா என்பதை ஒரு தடவை சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

* * *

நாட்டை விட்டு ஓடிய கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் பதுங்கி இருக்கிறார். அவருக்கு ஆக பதினைந்து நாள் விஸா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அதனால் அவர் மாத முடிவுக்கு முன் அங்கிருந்து கிளம்ப வேண்டும் என்றெல்லாம் செய்திகள் வெளியாகின.

ஆனால், அவருக்கு மிக நெருக்கமான வட்டாரம் ஒன்று அந்தச் செய்திகள் எல்லாம் முழுத் தவறு என்கின்றது. அவர் சிங்கப்பூரில் இரண்டரை மாதங்கள் தங்கி இருப்பார், அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தி என்றும் அந்த வட்டாரம் அடித்துக் கூறியது. அந்தக் காலகட்டத்திற்கு பின்னர்தான், இலங்கையில் நெருக்கடி நிலைமை சற்றுத் தணிய, அவர் நாடு திரும்புவார் என்றும் கூறப்பட்டது.

* * *

ஜனாதிபதித் தேர்தலில் செல்லாத வாக்குகளை அளித்த நால்வரில் ஒருவர் தமிழர். நம்மூர் சிற்றரசர் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

மற்றொருவர் முன்னாள் படைத் தளபதி. நாடாளுமன்றத்தில் இருக்கும் இரண்டு படைத்தளபதிகளில் ஒருவர். மற்றைய இரண்டு பேரும் சு.கவினர்.

இந்த விவரங்களை மேலும் விலாவாரியாக நான் வெளியிட்டால் சபாநாயகரின் விசாரணை குழுவின் முன் பவ்யமாக ஆஜராக வேண்டிவரும். அதனால் 'விட்டு விடுங்கள் சாமி' என்று மேலதிக விளக்கங்கள் தராமல் முடித்துக் கொள்கிறேன்.

யார், யார் தமக்கு வாக்களித்தார்கள் என்பது புதிய ஜனாதிபதி ரணிலுக்கு உறுதியாகவே – அத்துப்படியாகவே – துல்லியமாகவே – தெரியுமாம். அதனால் யாழ். செயலகத்தை ஆட்டிப்படைத்த அமுல் பேபியின் கொட்டம் அடங்குகின்றது. ஆளுநரும் முழுசுகின்றார் என்றுகேள்வி.

இவை தொடர்பில் அடுத்த வாரத்தில் பல புதிய செய்திகள் வரும் என்கிறார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

(மின்னல்)

## தூதர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"உரிய அதிகாரிகளுடன் உண்மை நிலையை உறுதிப்படுத்தாமல் வெறுமனே சமூக ஊடகங்களில் வெளியான தகவல்களை மட்டும் வைத்துக் கொண்டு என்னைக் கண்டித்து செய்திகள், தகவல்கள் வெளியிடுவது எப்படிச் சரியாகும்?" – என்று அவர்களைப் பார்த்து ஜனாதிபதி கேட்டார்.

"நீங்கள் ஆக சமூக ஊடகங்களை மட்டுமே நம்பிச் செய்திகளை, குறிப்புகளை, அறிக்கைகளை வெளியிடுகின்றீர்கள்" என்று அவர் வெளிப்படையாகவே குற்றம் சுமத்தினார்.

"உரிய அதிகாரிகளோடு விடயங்களை உறுதிப்படுத்தாமல் நீங்கள் வெளியிடும் கருத்துக்களால் இலங்கை பற்றி சர்வதேச ரீதியில் தவறான அபிப்பிராயங்கள் ஏற்பட்டுள்ளன" – என்று அவர் நேரடியாகவே குற்றம் சுமத்தினார்.

"உங்களில் பலரினதும் நடவடிக்கைகள் தொடர்பாக நான் அதிகம் அதிருப்தியுற்றிருக்கின்றேன்" – என்ற சாரப்பட அவர் கருத்து வெளியிட்டார்.

அமெரிக்கத் தூதுவரைப் பார்த்து "இப்படியான ஆக்கிரமிப்பு வொஷிங்டனில் நடந்தால் அதை உங்கள் நாடு அனுமதிக்குமா?" – என்று கேட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "உங்கள் நாட்டின் சரித்திரத்தை ஆபிரகாம் லிங்கனிலிருந்து படித்துக் கொண்டு வாருங்கள்" என்றும் சொன்னார்.

ஜனாதிபதி செயலகம் தொடர்பாக உண்மையில் நடைபெற்ற விடயங்களை அவர் தூதுவர்களுக்கு வரிசைக் கிரமமாகத் தெளிவுபடுத்தினார்.

அவர்கள் (போராட்டக்காரரர்கள்) ஜனாதிபதி செயலகத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமித்து இருக்கிறார்கள். அது தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய உத்தரவை அவர்களுக்குக் கையளிக்கச் சென்ற போது அவர்கள் மிக மோசமாக நடந்து கொண்டார்கள். வேறு வழி இல்லாததால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. – என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தூதுவர்களிடம் நேரடியாகத் தெரிவித்தார் என அறிய வந்தது.

## ரணிலைக் கண்டபடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விமர்சித்துக் கொண்டு அல்லது போராடிக் கொண்டிருப்பதில்

அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்த் தரப்பினர் தந்திரோபாயமான முறையில் ஜனாதிபதியை அணுகி கருமங்களை ஆற்றவேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞான முத்து சிறிநேசன் தெரிவித்தார்

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனநாயக ரீதியான போராட்டத்தை நாங்கள் வரவேற்கின்றோம். போராட்டக்காரர்கள் நியாயமாக என்ன கோரிக்கையை முன்வைக்கின்றார்களோ அதை நிறைவேற்றுவதுதான் புத்திசாதுரியமானது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்க்கமான முறையில் சிந்தித்து ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

தற்போது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இனி அடுத்ததாக தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல்வாதிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதைச் சிந்திப்பதைவிட்டு இப்போது தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியைக் கண்டபடி விமர்சித்துக் கொண்டு அல்லது போராடிக் கொண்டிருப்பதில் அர்த்தமிருப்பதாக தெரியவில்லை.

தென் பகுதியில் அமைதி வழிப் போராட்டக்காரர்கள், கிளர்ச்சிப் போராட்டக்காரர்கள் என இரண்டு வகையினர் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களது கருமங்களைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். தற்போதைய சூழ்நிலையில் தமிழர்களைப் பொறுத்தவரையில் பல விடயங்கள் காணப்படுகின்றன. அதில் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, போரினால் பாதிக்கப்பட்டவர்கள் விடயம், காணி விடயம், தொல்பொருள் எனும் பெயரில் அத்துமீறல் விடயங்கள் உள்ளிட்ட பல விடயங்களில் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இவ்வாறான பல விடயங்கள் இருக்கையில் நாங்கள் இந்தக் கால கட்டத்தில் தந்திரோபாயமான முறையில் ஜனாதிபதியைப் பயன்படுத்தி என்ன செய்யலாம் என்பதைத்தான் சிந்திக்க வேண்டும்.

நான் சிங்கள மக்களின் வாக்குகளால்தான் வெற்றி பெற்றவன் எனவும், சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப் போவதாகவும் முன்னைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். ஆனால், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓரளவுக்கு பல்லின மக்களுடன் சேர்ந்து போகக்கூடிய பண்புகள் இருக்கின்ற படியால் இந்தச் சூழ்நிலையை நாங்கள் எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்பதுதான் முக்கியமாக இருக்கின்றது – என்றார்.

## இணக்கமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று அவர் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

அரசியல் களத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள இந்த மக்கள் போராட்டத்தை அரசியல் ரீதியாகவும் ஜனநாயக வழியிலும் அணுகுவதற்குப் பதிலாக, அடக்கு முறையைப் பிரயோகித்து அதனை முடக்க முயற்சிப்பது எதிர் மறையான விளைவுகளை ஏற்படுத்தி, பிரச்சினை மேலும் உக்கிரம் அடைவதற்கே வழிவகுக்கும்.

புதிய ஜனாதிபதியும், அவரின் தலைமையில் அமைக்கப்படும் அரசாங்கமும் நிதானத்துடன் இந்த போராட்டத்தை அணுகி, ஆரோக்கியமான முறையில் அதற்கான தீர்வினைக் கொண்டு வருவதற்கான சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால், இலங்கையின் எதிர்காலம் நெருக்கடிக்குள் மூழ்கிவிடும்.

இந்தப் போராட்டம் தொடர்பிலான தவறான அணுகு முறையை கைவிட்டு, போராட்ட சக்திகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஏதுவாக, கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறும், தொடரும் எதிர் நடவடிக்கைகளை கைவிடுமாறும், தீர்வு காணும் நோக்குடன் கூடிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முன்வருமாறும் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கோருகின்றோம்.

இலங்கை மீது சர்வதேச ரீதியாக எழுந்திருக்கும் அனுதாபமும் காட்டப்படும் ஆதரவும் இழக்கப்படுமானால், மீட்டெடுக்கப்பட முடியாத இழப்புக்களையும், சீர் செய்ய முடியாத பின்னடைவுகளையும் நாடு நிச்சயம் சந்திக்க வேண்டி இருக்கும் என்பதை சகல தரப்பினரும் மறந்துவிடக் கூடாது. – என்று உள்ளது.

## ரணில் அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

அந்நாட்டு அரச தொலைக்காட்சி வெளியியிட்ட செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதிய அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதமராக தினேஷ் குணவர்தன பதவியேற்றார். அதன்பின்னர் பிற்பகல் வேளையில் புதிய அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. அதன்பின்னர் மாலையில் முதல் அமைச்சரவைக் கூட்டம் இடம் பெற்றது.

இதன்போது நடப்பு விவகாரங்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளன. அமைச்சரவைப் பத்திரங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை.

## யாழில் போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோல்பேஸ் போராட்டக்காரர்கள் மீதான ரணில் – ராஜபக்ஷக்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிப்போம் எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இன்று மதியம் 1 மணிக்கு இந்த போராட்டம் இடம்பெறுமென மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் சுகு தோழர், மின்சார சேவைச் சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் க.இளங்குமரன்,

நல்லூர் சோசலிச இளைஞர் சங்க அமைப்பாளர் கே.சரவணன், பருத்தித்துறை சோசலிச இளைஞர் சங்க அமைப்பாளர் ச.கணேசரூபன் ஆகியோர் கலந்து கொண்டு இந்த போராட்டத்திற்கான அழைப்பை விடுத்தனர்.

## மன்னிப்புச்சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடியாதது அதிகாரிகள் உடனடியாக பதவிவிலகவேண்டும்எனவேண்டுகோள் விடுத்துள்ளது.

டுவிட்டர் பதிவில் இதனை தெரிவித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமை பாதுகாக்கப்பட வேண்டும், இலங்கை அதிகாரிகள் உடனடியாக இந்த வன்முறை நடவடிக்கைகளை கைவிடவேண்டும், சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

அதிகாரிகள் ஊடக சுதந்திரத்தை பாதுகாக்கவேண்டும், பத்திரிகையாளர்கள் 'கோட்டா கோ கம'விற்குள் நுழைவதைத் தடுக்கக்கூடாது, பத்திரிகையாளர்கள் தங்கள் கடமையைச் செய்வதை தடுப்பது பத்திரிகைச் சுதந்திரத்தை நேரடியாக மீறும் செயல் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சர்வகட்சி அரசுக்கு சாவு மணி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசு – அமைச்சரவை – நேற்று பதவியேற்றுக் கொண்டு விட்டது. பெரும்பாலும் முன்னைய கோட்டா அரசின் அதே முகங்கள், அதே பதவிக்கு வந்துள்ளன. ஓரிரு மாற்றங்களைத் தவிர.

இது தற்காலிக அமைச்சரவைதான், விரைவில் சர்வகட்சி அரசு ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும், அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன, அந்தச் சர்வகட்சி அரசை உருவாக்குவதற்கான கால அவகாசம் வரை பழைய அமைச்சரவையைக் கொண்டிழுப்பேன் என்பதே ஜனாதிபதி ரணில் தரப்பில் வெளியான தகவல்களாகும்.

சர்வகட்சி அரசு அமைப்பது குறித்து பிரதான எதிர்க்கட்சிகள் எல்லாவற்றிற்கும் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நாட்டின் இன்றைய இக்கட்டு நிலையில், நாட்டைப் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீளத் தூக்கி நிறுத்துவதற்கு தேசிய அரசு ஒன்றுதான் வாய்ப்பு – கொஞ்ச நஞ்சம் நம்பிக்கை தரும் நகர்வு – என்பது துலாம்பரமானது.

ஆனால், நாட்டைப் பீடித்துள்ள துரதிர்ஷ்டமோ என்னவோ, அந்த முயற்சியும் முளையில் கருகும் பேரவல நிலைமையே தென்படுகின்றது.

எதிர்க்கட்சிகள் எல்லாமுமே ‘கோட்டா கோ கம’ போராட்டத்தில் போய்த் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அதனை விட்டால் அவற்றுக்கு அரசியல் பிழைப்பு நடத்த வேறு வழியும் இல்லை, கோசமும் இல்லை.

அதனால் ‘கோட்டா கோ கம’ மீது புதிய அரசு நேற்று அதிகாலை மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையை – பாய்ச்சலை – காரணம் காட்டி, அதனைக் கண்டித்து, இந்தச் சர்வகட்சி அரசு அமைக்கும் முயற்சியில் பங்களிக்காமல் அவை ஜாகா வாங்க முயற்சிக்கின்றன என்று தெரிகின்றது.

எந்தப் பொறுப்பையும், சவாலையும் எதிர்கொள்ளத் திராணியில்லாத எதிர்க்கட்சித் தலைவர் என்ற நாமத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் சஜித் பிரேமதாஸா, அதே நழுவல் போக்கைக் கடைப்பிடிக்க – பின்பற்ற – இப்போதும் ஒரு வாய்ப்புக் கிடைத்து விட்டது.

‘கோட்டா கோ கம’ போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலைக் காட்டி, சர்வகட்சி அரசில் சேராமல் ஒதுங்குவதற்கான காரணத்தை சஜித்தும் ஏனைய எதிரணிகளும் முன்னிறுத்துகின்றமை துரதிஷ்டவசமானது.

ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமர் அலுவலகம், அலரி மாளிகை போனவற்றிற்கு முன்னாள் மக்கள் பல்லாயிரக் கணக்கில் – பல லட்சக் கணக்கில் – கூடி அமைதி வழியில் போராடுவது வேறு. பாதுகாப்புத் தடைகளை உடைத்து, கட்டு மீறி, படையினரை நொறுக்கித் தள்ளிக் கொண்டு, அவற்றுக்குள் வன்முறையாகப் புகுந்து, அவற்றைக் கைப்பற்றி வைத்துக் கொண்டு, அடாவடித்தனம் பண்ணுவது வேறு. அமைதி வழியில் மக்கள் நடத்திய போராட்டத்தைக் கண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஓடவில்லை. அதற்குப் பின்னால் வெடித்த பெரும் வன்முறைக்கு முகம் கொடுக்க விரும்பாமல், அந்த வன்முறையை இரும்புக் கரம் கொண்டு அடக்கத் தலைப்படாமல்தான் அவர் பதவியை விட்டு ஓடினார்.

இந்த உண்மை அப்பட்டமாகத் தெரிந்திருந்தும், இந்தப் போராட்டம் வன்முறையேயற்றது என உலகம் அங்கீகரிக்கின்றது, அதனைப் படையினரைக் கொண்டு அடக்குவதா என்று விதண்டாவாதம் பேசி, அதன் அடிப்படையில் சர்வகட்சி அரசு அமையம் முயற்சிக்கு ஆப்பு வைக்கும் வேலையை தமிழ்ப் பிரதிநிதியே முன்னின்று முன்னெடுப்பது நமது துரதிர்ஷ்டமின்றி வேறில்லை.

# இலங்கையில் உணவுப் பாதுகாப்பற்று 60 லட்சத்துக்கும் அதிகமான மக்கள்!

## உலக உணவு திட்டம் அறிக்கை

இலங்கையில் 63 லட்சம் மக்கள் உணவு பாதுகாப்பற்ற நிலைமையில் உள்ளனர். நெருக்கடி நிலைமை ஏற்படும்போது இந்த நிலைமை மேலும் அதிகரிக்கும் என்று உலக உணவு திட்டம் எச்சரித்துள்ளது.

இலங்கையின் உணவு பாதுகாப்பு நிலைமை தொடர்பில் கடந்த 15 ஆம் திகதி உலக உணவு திட்டம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

67 லட்சம் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய உணவு வகைகளை உட்கொள்வதில்லை. விவசாயிகளுக்கு விதைகள், உரம் மற்றும் நிதியுதவி கிடைக்கப் பெறாவிட்டால், வரவிருக்கும் பெரும்போகத்தில் நெற்செய்கை 50 சதவீதமாகக் குறைவடையும் அபாயம் உள்ளது. அத்தோடு மீன்பிடி மற்றும் கால்நடைத் துறைகளுக்கு மீளமுடியாத நிலைமை ஏற்படும்.

தேசிய ரீதியில் 63 லட்சம் மக்கள் உணவு பாதுகாப்பின்றி உள்ளனர். இது நூற்றுக்கு 28.3 சதவீதமாகும். இவர்களில் ஆகக் குறைந்தது 65 ஆயிரத்து 600 பேர் கடுமையான உணவு பாதுகாப்பின்றியுள்ளனர். இந்த புள்ளி விவரங்கள் கடுமையாக அதிகரிக்கக் கூடும்.

வானளாவிய ரீதியிலான உணவுச் செலவுகள் மக்கள் தங்கள் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதைக் கடினமாக்குகின்றன. சுமார் 67 லட்சம் மக்கள் போதுமான உணவை உட்கொள்வதில்லை மற்றும் 53 லட்சம் மக்கள் உண்ணும் உணவு வகைகளின் எண்ணிக்கையை குறைத்து வருகின்றனர்.

கடந்த மூன்று மாதங்களில் வருமானம் வெகுவாகக் குறைந்துள்ளது. ஐந்தில் இரண்டு குடும்பங்கள் தங்கள் வருமானம் பாதியாகக் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர். உணவுப் பற்றாக்குறையைச் சமாளிக்க, 50 லட்சம் மக்கள் நெருக்கடி அல்லது அவசரகால வாழ்வாதாரத்தை சமாளிக்கும் உத்திகளைப் பயன்படுத்துகின்றனர்.

இது வருமானம் ஈட்டும் நடவடிக்கைகள் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கான அவர்களின் நடுத்தர மற்றும் நீண்ட காலத் திறனை பாதிக்கக்கூடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர் மீது இராணுவத்தினர் ஈவிரக்கமற்ற தாக்குதல்

## சட்டத்தரணி சாலிய பீரிஸ் கடும் காட்டம்

காலிமுகத்திடலில் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஈவிரக்கமற்ற தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி சாலிய பீரிஸ் இந்த தேவையற்ற ஈவிரக்கமற்ற பலப்பிரயோகம் இந்த நாட்டுக்கு எந்த வகையிலும் உதவியாக அமையாது நாட்டின் கௌரவத்துக்கும் சர்வதேச அளவில் உதவியாக அமையாது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பல சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

விவரங்கள் இன்னமும் முழுமையாக கிடைக்காத போதிலும் நுவான் போபகே உட்பட பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பலர் தாக்கப்பட்டுள்ளனர் எனவும் எனக்கு தகவல்கள் கிடைக்கின்றன.

அதிகாரிகள் அனைவரினதும் பாதுகாப்பையும் உறுதிசெய்யவேண்டும் அனைவரும் எங்குவைக்கப்பட்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்தவேண்டும். – என அவர் தெரிவித்துள்ளார்.

# காலிமுகத்திடல் போராட்டத்தின் மீது அடக்குமுறை; கனடா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா கண்டனம்!

கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் வியாழக்கிழமை நள்ளிரவில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாகப் பிரித்தானியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் ஆழ்ந்த கவலையும் கண்டனமும் வெளியிட்டுள்ளன.

மேற்படி சம்பவம் தொடர்பில் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹுல்டன் தெரிவிக்கையில் –

காலி முகத்திடல் போராட்டக் களத்தில் இருந்து வரும் செய்திகள் தொடர்பாக மிகவும் கவலையடைகிறேன். அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கான உரிமையின் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்துகின்றோம் என பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கனேடிய உயர்ஸ்தானிகர் தெரிவிக்கையில் –

காலி முகத்திடல் போராட்டக் களத்தில் ஏன் இப்படி நடக்கிறது என்று தெரியவில்லை. அதிகாரிகள் நிதானத்துடன் செயல்படுவதும் வன்முறையைத் தவிர்ப்பதும் முக்கியம் என கனேடிய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அமெரிக்கத் தூதுவர் கருத்துத் தெரிவிக்கையில் –

கொழும்பு காலிமுகத்திடல் பகுதியில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் நள்ளிரவில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன் என தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், அதிகாரிகள் நிதானத்தை கடைப்பிடிக்கவேண்டும் என வலியுறுத்துகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் மருத்துவ சிகிச்சைகளை பெறுவதற்கான உடனடி அனுமதியை வழங்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

## காலிமுகத்திடலில்,

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவர்களுக்கு ஆதரவாக நீதிமன்றில் சட்டத்தரணிகள் படை களமிறங்கியிருந்தது.

காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகவும், நுழைவாயிலை அடைத்தும் முற்றுகையிட்டிருந்த அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்களையும் மற்றும் அங்கு அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்களையும் அகற்றுவதற்காக ஆயுதம் தாங்கிய முப்படையினர், பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கூட்டு நடவடிக்கையின்போதே மேற்படி 9 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின்போது படையினரின் தாக்குதலில் காயமடைந்த பி.பி.சி. ஊடகவியலாளர் உள்ளிட்ட 15 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

படையினர் மற்றும் பொலிஸாரின் இந்த அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராக உள்நாட்டிலிருந்தும், சர்வதேச நாடுகளிலிருந்தும் பலரும் கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

# ரணில் கோட்டாபயவை விட கடுமையானவர் என்பதை முழு நாடும் அறிந்துகொண்டது!



## ஓமல்பே சோபித தேரர் காட்டம்

காலிமுகத்திடல் போராட்டகாரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இழிவான, கொடூரமான தாக்குதல் எனவும் பொது மக்களின் போராட்டத்தை ஆயுத பலத்தில் அடக்க இடமளிக்க வேண்டாம் என அதனை வன்மையாகக் கண்டிக்கிறோம் எனவும் கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இவ்விதமாக போராட்டத்தை அடக்க கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சந்தர்ப்பம் இருந்தது எனினும் அவர் அப்படி செய்ய வில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி பதவிப்பிரமாணம் செய்து 24 மணி நேரம் கடந்து வருகிறது. எனினும் இதுவரை சர்வதேசத்தின் சரியான வரவேற்பும் கிடைக்கவில்லை.

அண்மையில் சர்வதேசம், அரசாங்கத்துக்கு அறிவித்திருந்தது. அரசாங்கத்துக்கு எச்சரிக்கையும் விடுத்திருந்தது. அப்படியான சந்தர்ப்பத்தில், நிராயுதப்பாணிகளாக ஜனநாயக கோரிக்கைகளை விடுக்கும் போராட்டகாரர்கள் மீது ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் இரவில் பயங்கரவாதிகளை அடக்கும் விதத்தில் தாக்குதல் நடத்தியமை இழிவானது. இந்த விதத்தில் மக்கள் போராட்டத்தை அடக்க கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இயலுமை இருந்தது. எனினும் அவர் அப்படி செய்ய வில்லை. புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கோட்டாபய ராஜபக்ஷவை விட கடுமையான முடிவுகளை எடுக்கும் நபர் என்பது முழு நாடும் புரிந்துகொண்டுள்ளது எனவும் ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார்.

## காலிமுகத்திடலில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்: பணி இடைநிறுத்தப்பட்ட எஸ்.எஸ்.பி. மீள சேவைக்கு!

ஜனாதிபதி மற்றும் பிரதமரை பதவி விலக வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்தின் இடையே, ஊடக நடவடிக்கைகளுக்காக சென்ற சிரச, சக்தி டீ.வி. ஊடகவியலாளர்கள் நால்வர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் (சம்பவம் நடக்கும் போது பிரதமராக இருந்தார்) வீட்டின் முன்பாக வைத்து தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த பொலிஸ் விஷேட அதிரடிப் படையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொமேஷ் லியனகே மீள சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளார். பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் இதனை வெளிப்படுத்தின.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது கடந்த 9 ஆம் திகதி ஊடகவியலாளர்கள் 6 பேர் அவரது வீட்டின் முன்பாக ஊடக நடவடிக்கைகளிடையே தாக்கப்பட்டிருந்தனர். இதனையடுத்து பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில், ஊடகவியலாளர்களை தாக்கிய பொலிஸ் குழுவின் கட்டளை அதிகாரியாக செயற்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொமேஷ் லியனகே பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டார்.

எவ்வாறாயினும் ரணில் விக்கிரமசிங்க 8 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக பதவியேற்ற நிலையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொமேஷ் லியனகேயை மீள சேவைக்கு அழைப்பதற்கான கடிதம் பொலிஸ் மா அதிபரால் அனுப்பப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்புகுற்றத்தடுப்புப்பிரிவுவிசாரணைகளைஆரம்பித்துள்ளது. இது தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் கடந்த 12 ஆம் திகதி கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனவலவிடம் அறிக்கை ஊடாக விடயங்களை முன்வைத்த நிலையில், விசாரணைகளுக்கான உத்தரவுகளையும் பெற் றுக் கொண்டனர்.

அதன்படி மேற்படி தாக்குதல் தொடர்பிலான செம்மைப் படுத்தப்படாத காணொலிகளை விசாரணையாளர்களுக்கு வழங்குமாறு நீதிவான் ஹர்ஷன கெக்குனவல அனைத்து ஊடகங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி இரவு வேளையில், அப்போதைய பிரதமரின் இல்லத்தை அண்மித்த பதற்ற நிலை தொடர்பில் தகவல் சேகரிக்க சென்ற சிரச தொலைக்காட்சியின் வீடியோ படப் பிடிப்பாளர் வருன சம்பத், அலுவலக செய்தியாளர் சரசி பீரிஸ், இணைய ஊடகவியலாளர் ஜன்னித்த மெண்டிஸ் சக்தி ரி.வி. ஊடகவியலாளர் சிந்துஜன் உள்ளிட்ட 6 பேர் அங்கு கடமையில் இருந்த பொலிஸாரால் தாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## போராட்டக்காரர்மீது தாக்குதல்; ஐ.நாவிடம் மனு கையளிப்பு

காலிமுகத்திடலில் இருந்த போராட்டகாரர்கள் மீது பாதுகாப்பு படையினர் தாக்குதல் நடத்தியமைக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் விசேட மனு ஒன்றைக் கையளித்துள்ளனர். கொழும்பு 4 தும்முல்லையில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் அலுவலகத்தில் இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார, முஜிபுர் ரஹ்மான், ஹர்ஷன ராஜகருன ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

அமைதியான போராட்டகாரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாகக் கவனம் செலுத்தி, அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு இந்த மனு ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார் என முஜிபுர் ரஹ்மான் கூறியுள்ளார்.

# சமையல் எரிவாயு கோரி திருமலையில் ஆர்ப்பாட்டம்





திருகோணமலை சிவன்கோயில் அருகில் மக்கள் எரிவாயு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டம் நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் எரிவாயு விநியோகிக்கப்படும் நிலையில் வியாழக்கிழமை தமக்கும் எரிவாயு வழங்கப் படுமென எதிர்பார்த்து மக்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இந்நிலையில் நேற்றும் எரிவாயு வழங்கப்படாத நிலையில், தமக்கான எரிவாயுவை வழங்குமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

# ஜனாதிபதி ரணில் வீட்டின் மீது தாக்குதல்; காணொலி இருப்பின் 'வட்ஸ்அப்' செய்க!

## பொது மக்களிடம் வேண்டுகோள்



கொழும்பு - 3, 5 ஆம் ஒழுங்கை, இலக்கம் 119 இல் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டின் மீது தீ வைத்து அவரது கார் உள்ளிட்ட சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில், தொலைபேசிகள், காணொலி பதிவு உபகரணங்கள் ஊடாக பதிவு செய்யப்பட்ட காட்சிகள் இருப்பின் அவற்றை தமக்கு வட்ஸ்அப் ஊடாக அனுப்பி வைக்குமாறு பொலிஸார் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி நடந்த இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை நால்வர் கைது செயப்பட்டுள்ள நிலையில், சி.ஐ.டியின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கீழான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந் நிலையில், பொலிஸ் தலைமையகம்ஊடாகவிஷேடகோரிக்கையினை முன் வைத்துள்ள சி.ஐ.டி.யினர், 0718594950 எனும் தமது வட்ஸ் அப் இலக்கத்துக்கு அவ்வாறான காணொலிகளை அனுப்பி வைக்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை முன் வைத்துள்ளனர்.

# கியூ.ஆர். முறைமைக்கு 30 லட்சம் வாகனங்கள் பதிவு

நாட்டில் எரிபொருள் விநியோக நடவடிக்கைக்காக அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய எரிபொருள் அட்டை ஊடான கியூ.ஆர். முறைமைக்கு 30 லட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவிக்கிறது.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்ட இணையதளத்தின் ஊடாக மாத்திரம் பதிவு செய்யுமாறும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத் திணைக்களம் பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் , தனிப்பட்ட தகவல்களை சேகரிக்க முயற்சிக்கும் அங்கீகரிக்கப்படாத இணையதளங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளமையால், அது தொடர்பாக எச்சரிக்கையாக இருக்குமாறு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெறும் 04 நாள்களில் 30 லட்சம் வாகனங்கள் இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்துள்ளதாகத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் குறிப்பிடுகின்றது.

எவ்வாறாயினும், வாகன இலக்கத் தகட்டின் கடைசி இலக்கத்தின் அடிப்படையிலேயே எரிபொருள் நிரப்பப்பட்டது. அத்துடன், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பரீட்சார்த்த ரீதியாக கியூ.ஆர். முறைமை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# போராட்டம் நடத்தும் மக்களின் உரிமையை அடக்க முயன்றால் நிலைமை மோசமாகுமாம்!

## ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹெனா சிங்கர் எச்சரிகை

காலிமுகத்திடல் போராட்ட களத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புகள் கடுமையாகக் கண்டித்துள்ளன. ஊடகவியலாளர் உட்பட அனைவருக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாகக் கவலையடைவதாக கொழும்பில் ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹெனா சிங்கர் கூறியுள்ளார். ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக குரல் கொடுப்போர் போராட் டங்கள் தொடர்பாக ஆராய உரிமை இருப்பதாகவும் அவர்களின் செயற்பாடுகளுக்கு தடையேற்படுத்தக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் காலிமுகத்திடல் போராட்டகாரர்களை கலைக்க பலத்தை பயன்படுத்தியமை சம்பந்தமாக உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். அமைதியாக போராட்டத்தை நடத்தும் உரிமையை அடக்க முயற்சிப்பதன் மூலம் நாட்டுக்கு அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மை மேலும் மோசமான நிலைமைக்கு செல்லும் எனவும் ஹெனா சிங்கர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை அமைதியான எதிர்ப்புகளில் ஈடுபட இருக்கும் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாகப் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார்.

கனடா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல தரப்பினர் நேற்று நடத்தப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ளனர்

# இளம் செயற்பாட்டாளர்களாலேயே இந்த மாற்றம் சாத்தியம் என்பதை ரணில் நினைவிற்கொள்வார்!

## சந்திரிகா நம்பிக்கை



இலங்கையின் பெரும்பான்மையான பிரஜைகளின் ஆதரவுடன் இளம் செயற்பாட்டாளர்களின் அசாதாரணமான செயற்பாட்டால் இந்த மாற்றம் சாத்தியமானது என்பதை ஜனாதிபதி விக்கிரமசிங்க நினைவில் கொள்வார் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்

தனது முகநூல் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

இலங்கையின் 8 ஆவது ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில்விக்கிரமசிங்கவிற்கு நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முன்னொருபோதும் இல்லாத சவால்களின் பிடியில் எங்கள் நாடு சிக்கியுள்ள தருணத்தில்அதன்ஆட்சிபொறுப்பை ஏற்கின்றார்.

இலங்கையின் பெரும்பான்மையான பிரஜைகளின் ஆதரவுடன் இளம் செயற்பாட்டாளர்களின் அசாதாரணமான செயற்பாட்டால் இந்த மாற்றம் சாத்தியமானது என்பதை ஜனாதிபதி விக்கிரமசிங்க நினைவில் கொள்வார் என்பதில் எனக்கு சந்தேகமும் இல்லை. அவர்களின் கடுமையான அழைப்பு மக்களின் நலனுக்கான ஆட்சிக்கானதே தவிர, தனது நலனுக்கான ஆட்சிக்கானதல்ல

சட்டத்தின் ஆட்சி நேர்மை நல்லாட்சி நிலவும் ஆட்சிக்கானதே. அவர்களின் குரல்கள் ஊழல்களில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகளுக்கு எந்த இடமும் அளிக்காத அரசாங்கத்துக்கானது. இது மிகவும் கடினமான சவால், இதற்கு புதிய அரசமைப்பை உருவாக்குவதன் மூலம் அரசியல் சிவில் சமூக தலைவர்கள் தீவிர பங்களிப்பைச் செய்யவேண்டும்.

இது எங்கள் வரலாற்றில் தீர்க்கமான தருணம், இலங்கைக்கு தங்கள் இதயத்தில் தொலைநோக்கும் தாராளமனப்பான்மையும் கொண்ட தலைவர்கள் தேவை என அவர் தெரிவித்துள்ளார்.

# தெல்லிப்பழையில் அண்ணா சனசமூக நிலையம் மீள புனரமைப்புச்செய்து திறந்துவைக்கப்பட்டது





யாழ்.தெல்லிப்பழை வலி.வடக்கு பிரதேசசபையின் நிர்வாக ஆளுகைக்கு உட்பட்ட தெல்லிப்பழை மகாதனை அண்ணா சனசமூக நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் நிகழ்வும், அறநெறி வகுப்புத் தொடக்க நிகழ்வும், சுவாமிப்படம் வைத்தலும் அண்மையில் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் அண்ணா சனசமூக நிலையத்தின் தலைவர் நடராஜா உமாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன், தெல்லிப்பழை துர்க்காபுரம் கிராம உத்தியோகத்தர் எஸ்.இந்திரஜித் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

தெல்லிப்பழை மகாதனை கோணாசீமா நரசிங்க வைரவர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ.ச.யோகேஸ்வரசர்மா கலந்து கொண்டு ஆசியுரை ஆற்றினார்.

நிகழ்வின் ஒரு பகுதியாக மேற்படி பகுதி சிறுவர், சிறுமியர்களின் நன்மை கருதி புதிதாக அறநெறி வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அவர்களின் கற்றல், கற்பித்தலை ஊக்குவிக்கும் முகமாக இதன்போது கற்றல் உபகரணங்களும் விருந்தினர்களால் வழங்கிவைக்கப்பட்டன.

1972 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தால் இந்த சனசமூக நிலையத்துக்கான நிதி ஒதுக்கப்பட்டு அவராலேயே திறந்தும் வைக்கப்பட்டது.

இந்த அண்ணா சனசமூக நிலையத்துக்கெனப் புலம்பெயர்ந்து வெளிநாடொன்றில் வாழ்ந்து வரும் சிவராஜா சித்திரா தம்பதிகள் 30 கதிரைகளை அன்பளிப்புச் செய்த நிலையில் மேற்படி கதிரைகள் சனசமூக நிலைய நிர்வாகத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**




**1.கேள்வி:-**

இலங்கைப் பிரச்சினை பற்றி ஆராய இந்திய அரசு சர்வகட்சிக் கூட்டம் நடத்தியிருப்பது பற்றி?

**பதில் :-**

முன்னைய அனுபவத்தால் பயந்தான் வருகிறது!

**உலகநாதரின் ஒப்பீனியன்:- சோழியன் குடுமி.......? ஹி..ஹி..!**

**2.கேள்வி:-**

மக்கள் புரட்சியாளர்களால் இந்நாட்டில் பெரிய மாற்றம் வரும் என்று கருதுகிறீர்களா?

**பதில் :-**

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஜனாதிபதியை நாட்டை விட்டே துரத்தியடித்தது என்பதே பெரியமாற்றம் தானே! ஆனாலும் மனதிற்குப் பட்ட ஒன்றையும் சொல்ல வேண்டித்தான் இருக்கிறது. இனித்தான் புரட்சியாளர்கள் நிதானமாகவும் கவனமாகவும் நடந்து கொள்ள வேண்டும். எமது நாட்டைப் போன்ற ஒரு சிறிய நாட்டின் அரசியல் முடிவுகளில், பல பெரிய நாடுகள் தலையிடுவது தவிர்க்க முடியாததொன்றென்பது அனைவரும் அறிந்த விடயமேயாம். அதுவும் வறுமை நிலையில் தற்போது தள்ளாடும் எமது நாட்டிற்கு, பெரிய நாடுகளின் சொற்கேட்டு நடக்க வேண்டிய கட்டாயம் தவிர்க்க முடியாததொன்று. உலக, பிராந்திய வல்லரசுகள் தம்மை வெளிக்காட்டிக் கொள்ளாமலே திரைக்குப் பின்னால் இருந்து தமக்கு வாய்ப்பான முடிவுகளைப் பெறுவதற்காக, தந்திர வேலைகளைச் செய்துகொண்டேதான் இருக்கும். இது புரட்சியாளர்களுக்குத் தெரியாதவிடயம் இல்லை. அப் பெரியநாடுகள் இப் புரட்சியாளர்களையும் தம் கைவயப்படுத்தும் வேலைகளையும் எப்போதோ தொடங்கியிருக்கும்.

ஓர் உண்மையை மக்கள் புரட்சியாளர்கள் மறந்து விடக்கூடாது. ஜனநாயக நாடுகள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் நாடுகள் பலவற்றிலும், ஊழல்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஊழலை முற்றாக நீக்கிவிட்டு ஓர் அரசை நடத்தும் திராணி, பல அர சாங்கங்களுக்கு இன்று இல்லை. அதனால் ஊழல்வாதிகளுக்கு எதிராக மக்கள் புரட்சியை வெடிக்கச் செய்து, அரச நிர்வாகங்களை மாற்றுவதை முன் சொன்ன பெரிய நாடுகள் ஒருக்காலும் விரும்பமாட்டா. அந்தப் புரட்சியை முன் உதாரணமாகக் கொண்டு தத்தம் நாடுகளிலும் புரட்சிகள் வெடித்துவிடலாம் என்ற அச்சமே அதற்குக் காரணம். எனவே புரட்சியாளர்கள் தமது செயற்பாடுகளை இனி, சற்று தணியச் செய்வதே நல்லதென்று நினைக்கிறேன்.

இப்படித்தான் சென்னையில் மிக வேகமாய் வளர்ந்து இலட்சணக்கானவர்கள் ஒன்று திரண்ட ஜல்லிக்கட்டுப் பிரச்சினைக்கான மக்கள் புரட்சியை, வன்முறை கொண்டு ஒரே நாளில் அடக்கி முடித்தார்கள். இந்த உண்மையை நம் புரட்சியாளர்களும் மறந்துவிடக் கூடாது. எடுத்துக் கொண்ட நோக்கம் வென்றதை அடிப்படையாய் வைத்து, அடுத்தடுத்து இத்தகைய வெற்றிகளைச் சந்திக்கலாம் என நினைந்தால் பெற்ற வெற்றியையும் அவர்கள் இழக்கும் சூழ்நிலை வரலாம். இன்று நாம் கொண்டாடும் ஜனநாயகத்தை இயக்க எத்தனையோ சர்வாதிகாரக் கைகள் மறைவில் இருக்கின்றன. இதனைப் புரட்சியாளர்கள் மறந்துவிடக்கூடாது. புரட்சியால் பெற்ற வெற்றியை ஓர் அத்திவாரமாக வைத்து மக்கள் மத்தியில் ஜனநாயகப் பாதையூடாகச் சென்று, நாட்டில் மாற்றங்களை உருவாக்க நினைப்பதுதான் சரியாக இருக்கும்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- 'நுனிக்கொம்பர் ஏறினார் அஃது இறந்து ஊக்கின் உயிர்க்கிறுதி ஆகிவிடும்.'- ஹி.. ஹி.. இது வள்ளுவரது ஒப்பீனியனுங்கோ.**

**3.கேள்வி:-**

தப்பிச் சென்ற ஜனாதிபதியை அடித்து விரட்டப் போவதாகப் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் சில சொல்லியிருப்பதைப் பார்த்தீர்களா?

**பதில்:-**

இவர்களால்தான் எங்களுக்கு எப்போதும் பிரச்சினை. தாங்கள் இந்த மண்ணைவிட்டுத் தப்பிப்போய் பாதுகாப்பாக இருந்துகொண்டு இங்கு வாழும் எங்கள் விதியைத் தீர்மானிக்க அவர்கள் முயல்வது கண்டனத்திற்கு உரியது. தற்போதைய அவர்களது அறிக்கையும் எதிர்விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பது கூட அவர்களுக்குத் தெரியவில்லை. பேரினவாதிகளின் ஜனாதிபதியைப் பேரினவாதிகளே துரத்தியிருக்கிறார்கள். இதில் சிறுபான்மையினத்தவரான நாங்கள் கூக்குரல் இடத் தலைப்பட்டால், எங்களவரை இழிவு செய்ய இவர்கள் யார்? என்று தேவையில்லாத ஒரு எதிர்ப்புணர்வு பேரின மக்களிடம் கிளம்பலாம். எனவே அவர்களது தலைவரை அவர்களே பார்த்துக் கொள்ளட்டும். இந்த விடயத்தில் நாம் வெறும் பார்வையாளர்களாய் இருப்பதுதான் உகந்தது என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- சும்மா இருத்தலே சுகம்.**

**4. கேள்வி:-**

இந்தக் கேள்விக்கான பதில் வெளியாகிற பொழுது, முடிவுகள் தெரிந்திருக்கும் ஆனாலும் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராய் இருந்தால், ஜனாதிபதித் தேர்வில் போட்டியிடும் நால்வரில் யாருக்கு வாக்களிப்பீர்கள்? துணிவு இருந்தால் பதில் சொல்லுங்கள்.

**பதில்:-**

உண்மையைச் சொல்வதற்கு துணிவு எதற்கு? நாடாளுமன்றத்தில் புதிய ஜனாதிபதிக்கான தேர்வு நடப்பதற்கு முன் நான் எழுதும் பதில் இது. வெளிவந்த முடிவுகளை வைத்து நான் தீர்க்கதரிசனம் காட்டி எழுதுவதாய் நினைக்கமாட்டீர்கள் என்ற நம்பிக்கையோடு இக் கேள்விக்குப் பதில் எழுதுகிறேன். தற்போது நாடு இருக்கும் நிலைமையில் அரசியல் அனுபவமிக்க, புத்திசாலியான, உலகத் தொடர்புகள் உள்ள ஒருவருக்குத்தான் நிச்சயம் வாக்களிப்பேன். என்னைப் பொறுத்தவரை தனிமனிதர்கள் பற்றிய பிரச்சினையை விட, இன்று பாதாளம் நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் நாட்டின் பிரச்சினைதான் முக்கியம். அதனால் என் வாக்கு ரணிலுக்குத்தான்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- வாரிதியாரையும் எம்.பி. ஆசைபற்றி விட்டதோ!**

**5.கேள்வி:-**

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் அவர்கள், 'இது அவர்களுக்குள் நடக்கும் பிரச்சினை, இந்த நேரத்தில் நாம் மௌனமாய் இருப்பதுதான் நல்லது' என்கிறார். சுமந்திரனும் சாணக்கியனுமோ ரணிலைப் பந்தாடித் தள்ளுகின்றார்கள். இவர்களுக்குள் ஒருமைப்பாடு என்றைக்குமே வராதா? ஒன்றுபட்டு இவர்கள் இயங்க நீங்கள் ஏதேனும் முயற்சி செய்யக் கூடாதா?

**பதில்:-**

நாய் வாலை நிமிர்த்தச் சொல்லுங்கள். நிமிர்த்தி விடுகிறேன். இதை மட்டும் கேட்காதீர்கள்! சம்பந்தனுடைய கருத்தில் அனுபவ முதிர்ச்சி தெரிகிறது. மற்றிருவருடைய செயலிலும் தீர்க்கதரிசனமின்மை தெரிகிறது. மக்கள் புரட்சியாளர்களோடு தொடர்பில் இருப்பதை பிழை என்று சொல்ல மாட்டேன். அதே நேரத்தில் அவர்களை மட்டும் நம்பி மற்றைய அரசியல் தலைவர்களின் பகையை, தாமும் சம்பாதித்து, இனத்திற்கும் பெற்றுக் கொடுப்பது நிச்சயம் புத்திசாலித்தனமாகாது. மக்கள் புரட்சியாளர்கள் ஒட்டுமொத்த நாட்டையும் தம் கைவயப்படுத்தப் போகிறார்கள். அவர்களோடு சேர்ந்து நின்றால், வருங்காலத்தில் நமக்கும் தனித் தலைமை கிடைக்கும் என்பதான, சுமந்திரன் குழுவின் ஆசை புரிகிறது. ஆனால் அவர்களது எண்ணம் நிறைவேறும் என்று தோன்றவில்லை. நாடாளுமன்றத்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பில், பேரினத் தலைவர்கள் அளித்த வாக்குகள், புரட்சியாளர்களின் கருத்துக்கள் இந்த மண்ணில் எவ்வளவு தூரத்திற்குச் செல்லும் என்பதை ஓரளவிற்கு உணர்த்தி இருக்கின்றன. புரட்சியாளர்களோடு சேர்ந்து நின்று ரணிலை இந்தளவு தூரம் பகைத்ததைச் சரியான செயல் என்று எவரும் ஒத்துக் கொள்ளமாட்டார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் :- 'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்' சட்டப்புத்தகத்தை வைத்துவிட்டு சுமந்திரன் அவ்வப்போது திருக்குறளையும் படிப்பது நல்லதுங்கோ.**

**6.கேள்வி:-**

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரது இல்லத்திற்குள்ளும் அலுவலகத்திற்குள்ளும் மக்கள் நுழைந்தது பற்றி உங்கள் கருத்து?

**பதில்:-**

தவறு செய்துவிட்டார்கள் என்றே நினைக்கிறேன். ஆட்சியாளர்களைச் சங்கடப்படுத்தும் பல ஊழல் உண்மைகளை வெளிப்படுத்தக் கூடிய 'பைல்கள்' பல, மக்கள் புரட்சியின் போது தொலைந்து போய் விட்டதாய்ச் சொல்லித் தப்பித்துக் கொள்ள இவர்களது அவசரப்பட்ட செயல் ஆட்சியாளர்களுக்கு வாய்ப்பளித்துவிட்டது. தமக்கு வேண்டாத 'பைல்களை' காணாமல் ஆக்கு வதற்கு இவர்களே சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு...!**

**7.கேள்வி:-**

ஜனாதிபதி தேர்தலுக்கு முதல்நாள் இரவு சம்பந்தர் வீட்டில் நடந்த கூட்டமைப்பினரின் கூட்டம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-**

அந்தக் கூட்டம் பல உண்மைகளை வெளிப்படுத்தி விட்டது. அந்த உண்மைகளில் சிலவற்றைக் கீழே தருகிறேன்.

★ சம்பந்தர் வெறும் பெயரளவிற்கான தலைவராய்த்தான் அங்கு இயங்கி வருகிறார் என்பது தெரிய வரும் முதல் உண்மை.

★ தவறென்று தெரிந்தாலும் சுமந்திரனின் முடிவுகளை அவரால் மறுக்க முடியவில்லை என்பது தெரிய வரும் மற்ற உண்மை.

★ சுமந்திரன் தனது கருத்தை உறுப்பினர்களுக்குள் செலுத்த எந்த எல்லைக்கும் செல்வார் என்பது தெரியவந்திருக்கும் மூன்றாவது உண்மை.

★ தூதரக நிர்வாகி ஒருவரின் உரையாடலைப் பொதுவில் கேட்கும்படியாய்ச் செய்த செயல் அரசியல் தெரியாத அறிவீனத்தின் உச்சம்!

★ தம் எண்ணத்தை நிறைவேற்ற இந்தியாவையும் சங்கடத்திற்கு ஆளாக்கி இருக்கிறார்கள் இவர்கள்.

★ அக் கூட்டத்திற்கு டளஸ், சஜித்தை வருவித்தது இவர்களது நிதானமின்மையின் வெளிப்பாடு.

மொத்தத்தில் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரது அரசியல் பாதையில் நிகழ்ந்த மிகப்பெரிய சறுக்கல் இது என்பதில் ஐயத்திற்கு சிறிதும் இடமில்லை. அன் றைய கூட்டத்தின் முடிவினை உறுப்பினர்கள் மனம் ஒத்து ஏற்கவில்லை என்பதை வாக்களிப்புக் காட்டியிருக்கிறது. கூட்டமைப்பில் சம்பந்தன் காட்டும் அளவுக் கதிகமான நிதானமும் தவறு, சுமந்திரன் காட்டும் அளவுக்கதிகமான அவசரமும் தவறென்றே படுகிறது. இத்தவறுகள் திருத்தப்படாத பட்சத்தில் கூட்டமைப்புக்கு வேறெவரும் 'சமாதி' கட்டவேண்டிய தேவையில்லாமல் போய்விடும். பிழைவிடுவது அனைவருக்கும் பொது வான ஒன்றுதான். விட்ட பிழையைப் பற்றிக்கொண்டு நியாயம் பேசிக்கொண்டிராமல், இன நன்மை நோக்கி விட்ட பிழையைத் திருத்தும் ஆற்றலாவது இருக்கிறதா என்று இருந்து பார்ப்போம்.

உலகநாதரின் ஒப்பீனியன்:- குறுக்குவழியில் வெற்றியைச் சந்திக்க விரும்பினால் நேர்வழியில் பிரச்சினை, பிரச்சினையில்லாமல் வந்து சேரும் என்று உலகநாதர் என்ற ஒரு உயர்ந்த அறிஞர் சொல்லியிருக்கிறாருங்கோ. ஹி..ஹி..

**8.கேள்வி:-**

தான் அமைக்கப்போகும் அரசாங்கத்திற்கு நாட்டின் நன்மை நோக்கி எல்லோரும் கைகொடுக்க வாருங்கள் என்று புதிய ஜனாதிபதியின் கோரிக்கை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-**

கோட்டாபாயாவினால் ஜனாதிபதியாய் நியமிக்கப்பட்ட ரணில் இப்போது தான் உண்மை அதிகாரமுள்ள ஜனாதிபதியாய் மாறியிருக்கிறார். பலரும்

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

# இலங்கையில் சமத்துவத்தை ஏற்படுத்த சரியான தருணம்

## அமெ.காங்கிரஸ் இணை தலைவர்கள் இராஜாங்கச் செயலாளருக்குக் கடிதம்

அனைத்து இலங்கையர்களுக்குமான சமத்துவத்தை உறுதிசெய்வதற்கு அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்கு மிகச்சரியான தருணம் இதுவாகும் என்று அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி பிளின்கெனிடம் சுட்டிக்காட்டியுள்ள இலங்கையில் இன மற்றும் மதச்சுதந்திரம் தொடர்பான அமெரிக்க காங்கிரஸ் குழுவின் இணைத் தலைவர்கள், இலங்கையில் தெரிவுசெய்யப்படும் புதிய தலைவர் நாட்டில் நிதிநிலைமை உறுதிசெய்வதை மாத்திரம் இலக்காகக்கொண்டு செயற்படக்கூடாது.

மாறாக, நிலைமாறுகால நீதியை உறுதிசெய்வதையும், அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளுக்கு மதிப்பளிக்கக்கூடியவாறான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதையும், இனப்பிரச்சினை என்பவற்றை முடிவிற்குக்கொண்டுவருவதையும் முன்னிறுத்திச் செயற்படவேண்டியது அவசியமாகும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் இலங்கையில் இன மற்றும் மதச்சுதந்திரம் தொடர்பான அமெரிக்க காங்கிரஸ் குழுவின் இணைத் தலைவர்களான பில் ஜோன்ஸன் மற்றும் டெனி கே.டேவிஸ் ஆகியோர் இணைந்து அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி ஜே.பிளின்கெனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் அவர்கள் மேலும் கூறியிருப்பவை வருமாறு –

இலங்கையர்களை ஊக்குவிப்பதற்குக் கிடைக்கப்பெற்றுள்ள வாய்ப்பு தொடர்பாக இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டுகின்றோம். இலங்கையின் இன மற்றும் மதச்சிறுபான்மையினரின் உரிமைகள் முழுமையாக இலங்கையில் இன மற்றும் மதச்சுதந்திரம் தொடர்பான அமெரிக்க காங்கிரஸ் குழுவின் இணை தலைவர்கள் என்ற ரீதியில், இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பாக மிகவும் வலுவான நிதி உறுதிப்பாடு மற்றும் அனைத்து இலங்கையர்களுக்குமான சமத்துவம் ஆகியவற்றை அடைந்துகொள்வதற்கு அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதை இலக்காகக்கொண்டு இலங்கையர்களை ஊக்குவிப்பதற்குக் கிடைக்கப்பெற்றுள்ள வாய்ப்பு தொடர்பாக இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டுகின்றோம்.

இலங்கையின் இன மற்றும் மதச்சிறுபான்மையினரின் உரிமைகள் முழுமையாக வலுப்படுத்தப்படுவதையும் நிலைநாட்டப்படுவதையும் உறுதிப்படுத்த வேண்டிய மிகமுக்கியமான தருணம் இதுவாகும்.

இலங்கையின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வாரம் நாட்டைவிட்டு வெளியேறுவதுடன் அந்தப் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார். மக்களுக்கு அவசியமான உணவு, எரிபொருள், மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கு அவசியமான கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும் கடன்களை மீளச்செலுத்துவதற்கும் இயலாத நிலையை ஏற்படுத்திய நிதிநெருக்கடியின் விளைவாகக் கடந்த சில மாதங்களாக நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டங்களே இதற்குக் காரணமாக அமைந்தன.

எனவே, தற்போது சட்டத்தின் ஆட்சியைப் பின்பற்றக்கூடிய, இலங்கை மீண்டும் நிதி உறுதிப்பாட்டை எட்டுவதற்கு அவசியமான கடினமான தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

எது எவ்வாறெனினும் கடந்தகால யுத்தக்குற்றங்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பன உறுதிசெய்யப்படும் என வழங்கப்பட்ட வாக்குறுதியில் எவ்வித முன்னேற்றங்களையும் காணாத, ராஜபக்ஷ அரசாங்கத்தின்கீழ் தமது சிவில் மற்றும் மனித உரிமைகள் மிகையான அளவில் மீறப்படும் சம்பவங்களுக்கு முகங்கொடுத்த இனரீதியில் சிறுபான்மையினத்தவர்களான தமிழ்மக்களைப் பொறுத்தமட்டில் கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகல் மிக முக்கியமானதாகும்.

இருப்பினும் இலங்கையில் உண்மையானதும் நிலைபேறானதுமான மாற்றம் ஏற்படவேண்டுமானால், தெரிவுசெய்யப்படும் புதிய தலைவர் நாட்டில் நிதி நிலைமை உறுதிசெய்வதை மாத்திரம் இலக்காகக் கொண்டு செயற்படக்கூடாது. மாறாக ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு நிலைமாறுகால நீதியை உறுதிசெய்வதையும், அனைத்து இலங்கையர்களினதும் உரிமைகளுக்கு மதிப்பளிக்கக்கூடியவாறான மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதையும், வன்முறைகள் மற்றும் இனப்பிரச்சினை என்பவற்றை முடிவிற்குக்கொண்டுவருவதையும் முன்னிறுத்திச் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

அதன்படி இலங்கையில் புதிதாக ஸ்தாபிக்கப்படும் அரசாங்கம் கீழ்வரும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மேற்கொள்ளும் எந்தவொரு முயற்சிக்கும் அவசியமான ஆதரவை அமெரிக்க இராஜாங்கத்திணைக்களம் வழங்கவேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

நாட்டின் பல்லினத்தன்மை, சுயநிர்ணய உரிமை மற்றும் அரசியல், பொருளாதார, காணி மற்றும் பாதுகாப்பு அதிகாரங்களை அர்த்தமுள்ள வகையில் பரவலாக்கம் செய்தல் ஆகியவற்றுக்கு மதிப்பளிக்கக்கூடிய வகையில் நாட்டின் அரச கட்டமைப்பை மறுசீரமைக்கக்கூடியவாறான புதிய அரசமைப்பு வரைவைத் தயாரித்தல், போரின்போது இடம்பெற்ற மிகமோசமான மனித உரிமை மீறல் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொள்வதற்கு ஆதரவு வழங்கல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவமயமாக்கலை இல்லாதொழிப்பதுடன் வரவு, செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத்துறைக்கான நிதியொதுக்கீட்டைக் குறைத்து பொருளாதார அபிவிருத்திக்கான நிதியொதுக்கீட்டை அதிகரிப்பதன் மூலம் வடக்கு, கிழக்கில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உதவுதல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமலாக்கப்பட்டோர் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பங்களின் நீண்டகாலப் போராட்டங்கள் மூலம் முன்வைக்கப்பட்டுவரும் கோரிக்கைகளுக்கு உரியவாறான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதுடன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்குதல், வடக்கு, கிழக்கில் பாதுகாப்புத்தரப்பினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை உடனடியாக மீள ஒப்படைத்தல் ஆகியவை அந்த நடவடிக்கைகளாகும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

# புதிய ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின்கீழ் சீர்திருத்தங்கள் நாட்டில் முன்னெடுக்கப்படும்

## மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில்விக்கிரமசிங்கவின் கீழ் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள மத்திய வங்கி ஆளுநர் புதிய ஜனாதிபதி சீர்திருத்தங்களின் வலுவான ஆதரவாளர் எனவும் தெரிவித்துள்ளார்.

சி.என்.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரம் அடுத்த இரு மாதங்களில் 70 வீதமாக அதிகரித்த பின்னர் செப்ரெம்பரில் குறைவடையும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 17 ஆவது சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் கீழ் சர்வதேச நாணயநிதியம் நிதியை வழங்க ஆரம்பித்ததும் உலக வங்கியும் ஆசிய வங்கியும் மேலதிகமான 400 கோடி டொலர்களை வழங்கலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடி என்பது இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு ஒரு பாடம் எனவும் தெரிவித்துள்ள அவர் இந்த நெருக்கடி மூலம் கற்றுக்கொண்ட அனுபவம் காரணமாக சர்வதேச நாணய நிதியத்துடனான திட்டம் முடிவடைந்ததும் அவர்கள் சீர்திருத்தங்களை கைவிடக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

திட்டங்கள் முடிவடைந்ததும் அதிகாரிகள் பின்னோக்கி நகர்வதையும் சிறந்த கொள்கைகளைக் கைவிடுவதையும் நாங்கள் பார்த்திருக்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

என்னை பொறுத்தவரை இது அதிகாரிகளுக்கு பாடங்களை கற்றுக்கொண்டு முன்னோக்கி சரியான திசையில் நகர்வதற்கான வாய்ப்பு பொருளாதாரத்தைத் தொடர்ந்தும் பேண்தகுநிலையில் நிர்வகிப்பதற்கு இது எங்களுக்கு அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில்விக்கிரமசிங்கவின் கீழ் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள மத்திய வங்கி ஆளுநர் புதிய ஜனாதிபதி சீர்திருத்தங்களின் வலுவான ஆதரவாளர் எனவும் தெரிவித்துள்ளார்.



புதிய ஜனாதிபதி சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அர்ப்பணிப்பு தொடரும் என நாம் எதிர்பார்க்கின்றேன் விரைவில் அது சாத்தியமானால் அது சிறந்த விடயம்,அதன் காரணமாக நாங்கள் அனுபவிக்கின்ற துயரத்தின் காலத்தை குறைக்கலாம் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி நெருக்கடி அடுத்த சில மாதங்களுக்கு தொடரும் என மதிப்பிட்டுள்ள மத்திய வங்கி சர்வதேச நாணயநிதியத்துடன் உடன்பாடு ஏற்படும் வரை அது தொடரும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இந்தியா, ஜப்பான், சீனா, பங்களாதேஷ் போன்ற நாடுகளிடமிருந்து கடன்களை பெறுவதற்கான பேச்சுகளில் இலங்கை ஈடுபட்டுள்ளது என குறிப்பிட்டுள்ள நந்தலால் வீரசிங்க இலங்கை சீனாவின் கடன்பொறிக்குள் சிக்குண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுவதை நிராகரித்துள்ளார்.

சீனாவால் சிக்கவைக்கப்படுவது என்ற கருத்தை நான் ஏற்க மாட்டேன்,சீனா மிக நீண்டகாலமாக இலங்கையில் முதலீடு செய்து உதவி வருகின்றது, இதன் காரணமாகவே நாங்கள் சீனாவிற்கு குறிப்பிடத்தக்க கடன்களை கொண்டுள்ளோம்,சீனாவின் திட்டங்கள் சிறந்தவை பொருளாதாரரீதியில் பலனளிக்ககூடியவை என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## பாட்டும் நானே...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றுகூடி காட்டிய எதிர்ப்பை வென்றுவிட்டு, நிதானமாகப் பேசிய அவரது பேச்சு, மதிப்பிற்குரிய ஒன்று என்பதில் ஐயத்திற்கு இடமில்லை. புத்தியால் இயங்குபவர் என்ற ஒரு பெயரைப் பெற்றுவிட்ட ரணில், ஏதாவது கணக்குவழக்குப் பண்ணி அனைவரையும் அழைக்கிறாரா என்று தெரியவில்லை. அப்படியில்லாமல் உண்மையாக நாட்டின் நன்மை நோக்கி அழைத்திருந்தால் அவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- இதற்குள் ஒரு 'டீலும்' இல்லைதானே.**

**9.கேள்வி:-**

என்ன? உங்கள் நண்பர் வடக்கின் முன்னால் முதலமைச்சர் புதிய அரசில் அமைச்சராகி விடுவார் போல் இருக்கிறதே.

**பதில்:-**

அது பெரும்பாலும் உறுதிப்படுத்தப்பட்ட விடயமாகவே பலராலும் கருதப்படுகிறது. நல்லவற்றைத் தரும் விதியை 'ஆகூழ்' என்றும், தீயவற்றைத் தரும் விதியைப் 'போகூழ்' என்றும் சொல்வார்கள். நீதியரசருக்கு கொஞ்சக் காலாமாய் 'ஆகூழ்' நடந்து கொண்டிருக்கிறது. பெற்ற பதவியின் கடமைகளைச் சரிவரச் செய்யாமலே அதைவிட உயர்ந்த பதவியை அடைந்து கொண்டிருக்கிறார் அவர். முதலமைச்சர் பதவியை வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றார். இப்போது அந்தப் பதவியை வைத்து அமைச்சர் பதவியை பெறப்போகிறார். பிழைகள் விடுவது அனைவருக்கும் பொதுவான ஒன்றுதான். விட்ட பிழைகளைத் திருத்தவும் தெரிந்திருக்க வேண்டும் என முதல் கேள்வியில் சுமந்திரனுக்காகச் சொன்னதைத்தான் இவருக்கும் சொல்ல விரும்புகிறேன். மு.முதலமைச்சர் இங்காவது தன் நிர்வாகத் திறமையைக் காட்டி, தனது பழைய பழியைத் துடைக்க முயல்வாரா? காலம் தான் பதில் சொல்லவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன்:- இது உள் வீட்டுப் பிரச்சினையுங்கோ. ஹி..ஹி..**

# தமிழ்ப் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தார்மீகத் தகுதியை தமிழ் கூட்டமைப்பு இழந்து விட்டது

## தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் விளக்கம்

(மன்னார் நிருபர்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்க்க தரிசனமற்ற செயற்பாட்டால் தமிழ் மக்களைப் பிரதி



நிதித்துவப்படுத்தும் தார்மீக தகுதியைக் கூட்டமைப்பு இழந்து விட்டதாக தமிழ் மக்கள் கருதுகிறார்கள் எனத் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

அரசியல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கால நிலைவரத்தை நுட்பமாகப் புரிந்து கொண்டு தாம் தலைமை தாங்கும் மக்கள் கூட்டத்தின் இருப்பை மேலும் மேன்மைப்படுத்தும் வகையில் அந்த மக்களின் ஒத்துணர்ந்த மனநிலையையும், புரிந்து கொண்டு, அறிவார்ந்தமாக நின்று நிலைக்கக்கூடிய திடமான முடிவுகளை தகுந்த தருணத்தில் எடுப்பதே ஓர் அரசியல் கட்சியின் உண்மையான நோக்கு நிலையாகும்.

ஆனால் கூட்டமைப்பு மிகவும் பொறுப்பில்லாமல் சிறுபிள்ளைத்தனமாக தீர்மானம் எடுத்துள்ளது.

ஆகவே இவர்கள் தொடர்ந்தும் தலைமை தாங்க தகுதியுடையவர்களா? 2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் மௌனிப்பிற்கு பின்னர் கூட்டமைப்பினர் கடந்த 13 ஆண்டுகளாகத் தமிழ்ப் மக்களுக்கு பின்னடைவை ஏற்படுத்தும் தீர்மானங்களையேஎடுத்துவருகின்றனர்.

தற்போது தமிழரசுக்கட்சியின் தலைவரும் விமர்சித்திருப்பதும் மிக வேடிக்கையானது.

ஆகவே வடகிழக்கில் உள்ள இளைய சமுதாயம் தொடர்ந்து அமைதியாக இருப்பதும் பொழுது போக்கிற்கு முகநூலில் பொங்கி எழுவதில் எந்த பயனும் இல்லை. தீர்மானம்மிக்கவர்களாக மாறவேண்டும்.

இவர்களை வீட்டுக்கு அனுப்பும் பணியை விரைவாக முன்னெடுக்காவிட்டால் தமிழினத்தின் தன்மானத்தையும், சுயாதீனத்தையும், எதிரிகளிடம் வசப்படுத்தி விடுவார்கள்.

ஆகவே நீங்கள் விரைவாக இனப்பற்றுடன் விழித்தெழுங்கள். அரசியல் விழிப்புணர்வு இல்லாத சமூகம் அனாதைப் பிணத்திற்கு ஒப்பானது. தமிழ் மக்கள் தொடர்ந்து அமைதி காப்பதால்தான் இவர்கள் தான்தோன்றித்தனமான தீர்மானங்களை எடுக்கின்றனர்.

எனவே திரு.சம்பந்தன் வயோதிபம் காரணமாக வாழ்வின் அந்திம காலத்தில் உள்ளார். அவர் ஓய்வு பெறுவதே இந்த இனத்திற்கு செய்யக்கூடிய மிக சிறந்த நன்மையாகும்.

அதைப் பலரும் வலியுறுத்த வேண்டும். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கு ஒரு போதும் வல்லமையோ, ஆளுமையோ செயல் திறனோ இருந்ததில்லை.

தேர்தலில் வெல்வது மட்டுமே அவர்களது இலக்கு. இவர்களால் எப்படி தலைமை தாங்கமுடியும் என தமிழ்மக்கள் சிந்திக்க தொடங்கிவிட்டனர்.




வடிகட்டிய சிங்கள, பௌத்த இன வாதிகளுடன் கூட்டு. அதற்கு மாறாக, ரணிலை ஐவர் ஆதரித்தனர் என அறிகின்றோம். ஏன் இந்த இருட்டு வீட்டு குருட்டுநாடகம்? நிதானமாக முடிவெடுக்க முடியாததும், எடுத்த முடிவைஒ பின்பற்றாமையும் என்பது ஓர் அரசியல் கட்சிக்கு ஒழுங்குமல்ல, அரசியல்வாதிக்கு விழுப்பமும் அல்ல. ஆக, மொத்தம் இவர்கள் அரசியல் வணிகர்களே. மிக கண்டனத்திற்குரிய செயல்பாடு.

எனவே, வாக்களித்த மக்களின் விருப்பையோ, கருத்தியலாளர்களின் ஆலோசனையோ கேட்காமல், பல இயக்கங்களை உருவாக்கி, ஆயுதத்தையும், பணத்தையும் வழங்கி, அவர்களுக்குள் சண்டையும் ஏற்படுத்தி, பலரைக் கொலை செய்ய வைத்து, அமைதிப்படை என வந்து அட்டூழியம் செய்து, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வரை பங்கேற்று,



தமிழ்த் தேசியத்திற்கு எப்போதும் விரோதியாகவே செயற்படும் இந்தியாவின் சகுனி வேலையைப் புரிந்து கொள்ளாமல் இன ரீதியானதீர்மானத்தைமேற்கொள்வதற்கு அவர்களில் தங்கியிருப்பது அரசியலின் அயோக்கியத்தனத்தின் அதி உச்சம். விடுதலைக்குப் போராடி, இழக்க முடியாத இழப்புகளை எல்லாம் சந்தித்து, ஏதிலியாக உள்ள தமிழினம் உங்களை மறந்தும் மன்னிக்காது. ஆகவே வாக்களித்த மக்களுக்கு எதிர்காலத்திலாவது விசுவாசமாக இருங்கள்.

ஓர் அரசியல் கட்சி மக்கள் நலனில் பொறுப்பேற்று, பொறுப்புக்கூறி, பகிர்ந்து கொள்ளுதல், அவசியம் .

ஆனால் தலைவர்கள் சர்வாதிகாரிகளாகவே இருக்கிறார்கள்.

எப்படி ஜனநாயகக் கட்டமைப்பைப் பின்பற்ற போகிறார்கள்? பெயரளவில் ஜனநாயகக் கட்சி. எல்லோரும் தலைவர் பிரபாகரனாக தீர்மானம் எடுக்கவும், செயற்படவும் ஆசை.

ஆனால் ஒரு மணித்தியாலமேனும் பிரபாகரனாக வாழ முடியவில்லை.

அறமில்லாத அரசியல் செய்ததின் விளைவை இன்று ராஜபக்ஷ குடும்பம் படும் பாட்டைப் பார்த்து இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாளை இவர்களுக்கும் இந்த நிலை ஏற்படலாம்.

எனவே அறிவார்ந்தமாக தீர்மானம் எடுக்க முடியாதவர்கள் தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு உணர்வு சார்ந்து முரண்படுவர்களால் ஒரு போதும் தலைவர்களாக முடியாது.

சட்ட அறிவுள்ள திரு.சுமந்திரன் ஒரு தலைவராக நிதானமாகச் செயல்படாமல், மக்கள் மன்றைக் கையாள்வது, வழக்காடு மன்றில் ஒரு தரப்பு சட்டத்தரணி போல் வழக்காடுவது அல்ல. அதை சுமந்திரன் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆகவே தலைமையில்லாத வெறுமைக்குள் தமிழ் மக்கள் தொடர்ந்தும் தவிப்பதா? அல்லது வெறும் வாக்காளர்களாக இருக்கப் போகிறார்களா? வடகிழக்கு இளையோர்களே சிந்தியுங்கள்! இல்லாவிட்டால் தேசம் பறிபோனது போல் தமிழ்த்தேசியமும் முழுமையாக இவர்களால் பறி போய் விடும். – என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-70

**பழைய சாதம்தான்; ஏதும் புதிதல்ல!**

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார். அவருக்கு எதிராக வாக்களிப்போம் என பகிரங்கப்படுத்திய கட்சித் தரப்புகளிடையே இருந்த வாக்குகளின் கூட்டு எண்ணிக்கை 114. ஆனால் அதில் 82 வாக்குகளே டலஸ் அழகப்பெருமவுக்குக் கிடைத்திருக்கின்றன. பல பேர் தத்தமது கட்சிகளின் நிலைப்பாட்டை விட்டு, தனிப்பட்ட ரீதியில் ரணிலிடம் தாங்கள் அவருக்குத்தான் வாக்களிப்பார்கள் என உறுதியளித்தனர் என்று தகவல். கூட்டமைப்பின் அங்கத்தினர் சிலரும் கூட அவரைச் சென்று சந்தித்தனர் என நம்பிக்கையான கிசுகிசுப்புகள். மாகாண முதலமைச்சராக இருந்த காலத்தில் இருந்து ரணிலுடன் மிகவும் முரண்பாடாக, நேரில் முகம் கூடப் பார்க்காத நீதியரசர் விக்னேஸ்வரன் அவருக்கே வாக்களிக்கிறார் என கடைசி நேரத்தில் அறிவித்தார்.

134 வாக்குகள் ரணிலுக்குக் கிடைத்தன. அவை இரகசியமான வாக்குகள். அவருக்குத்தான் அவற்றின் விவரம்



தெரியக்கூடும். தனக்கு வாக்களித்தவர்களை அவரே அறிவார்.

2012இல் யாழ்ப்பாணத்தில் நடந்த மேதினப் பொதுக்கூட்டம் ஒன்றில் சம்பந்தன் ரணிலுடன் நின்று சிங்க (சிங்களக்) கொடியை உயர்த்திப் பிடித்து சந்தோப் பட்டமையையோ அல்லது அதன்பின் அது திருகோணமலை ஸ்ரீ பத்ரகாளி அம்பாளின் சிங்கக் கொடியாக நினைத்து அதைத்தான் பிடித்தார் என சம்பந்தன் நியாயப்படுத்தியமையையோ தமிழ் மக்கள் அவ்வளவு விரைவாக மறந்திருக்க மாட்டார்கள்.

டலஸ் அழகப்பெரும மஹிந்தாவின் மொட்டுக் கட்சியின் முதுகெலும்பாக இருந்தவர். மஹிந்தவால் அமெரிக்காவுக்கு அனுப்பிப் படிப்பதற்கு உதவி செய்யப்பட்டு, பின் அரசியலிலும் வளர்க்கப்பட்ட மஹிந்த விசுவாசி. நல்லாட்சி காலத்தில் சிறுபான்மையினரை அடையாளப்படுத்தும் நிறங்களையும் கோடுகளையும் தேசியக் கொடியிலிருந்து அகற்றி அதுதான் தங்களின் சிங்களத் தேசியக்கொடி என்று பிரசார படுத்துவதில் பங்களித்தவர்.

இந்த தேர்தலில் ரணிலை விலக்கி டலஸ் அழகப்பெருமவுக்குக் கொடி பிடிக்க சம்பந்தன் கூட்டமைப்பையும் இணங்க வைத்தார்.

இவை அரசியல் அனுபவங்களின் முதிர்ச்சியா, அன்றில் மூப்பில் இளையோர் எடுப்பிற்கெல்லாம் இணங்க வேண்டிய நிலையா என்பதைப் புரிவதற்குக் காலங்கள் ஆகலாம். தேர்தலுக்குப் பின்னால் டலஸ் அழகப்பெரும கூட தங்கள் கட்சியினர்தான், அவரைப் போட்டியில் இறக்கியவர்களும் தாங்களேதான் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த அறிவிப்புத் தந்துள்ளார்.

தனது கட்சிக்குள் இருந்து மூன்று வாக்குகளையே பெற்றுக் கொண்ட ஜே.வி.பியின் அனுர குமார திஸநாயக்க புதனன்று நடந்த வாக்கெடுப்பு வழமையான கையூட்டல்களும் குதிரை பேர வியாபாரமும் என்கிறார்.

வாக்குகளால் வீழ்த்தப்பட்டாலும் தனது அரசியல் கோட்பாடுகள் அப்படியேதான் உள்ளன என டலஸ் அழகப்பெரும கூறுகிறார். நாடாளுமன்றத்துக்கு வெளியே உள்ள 1.8 கோடி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தியே போட்டிக்கு இறங்கினேனே ஒழிய, நாடாளுமன்றத்தில் இருந்த 225 குடும்பத்தினர்களை நம்பியோ அல்லது அவர்களுக்காகவோ அல்ல என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

கூட்டமைப்பை குழியில் சுமந்திரனும் சாணக்கியனும் தள்ளுகின்றனர் என வும், கட்சிக் கூட்டத்தில் நடந்த பற்றி விவரங்கள் தந்து தமிழரது புலம்பெயர் சமூகம் ஆத்திரம் கொள்கிறது.

அதேசமயம் அந்த நடத்தைகள் ராஜதந்திர வட்டாரங்களில் எரிச்சலையும் ஆத்திரங்களையும் ஏற்படுத்தி உள்ளன.

அரசியலை விட்டு விடுதலைக்கு என்று புறப்பட்டு அந்த லட்சியத்திற்காக முழு நேரத்தையும், தமது வாழ்வையும், உயிரையும் தந்த விடுதலைப் போராளிகள் தற்போது இல்லை. தங்கள் தங்களை வளர்த்துக் கொள்ளவோ பாதுகாத்துக் கொள்வதற்கோவான அரசியல் தான் நடக்கிறது. அதற்குத் தமிழ் மக்கள் பழகிக் கொள்ள வேண்டியிருக்கிறது.

காலிமுகத்திடல் போராட்டம் பல நியாயங்களையும் குற்ற உணர்வுகளையும் இதுவரை அரசாங்க அரசியல்வாதிகளுக்கு ஏற்படுத்தி இருந்தாலும், அவர்களது தார்மீகங்களோ கோஷங்களோ கோரிக்கைகளோ எதுவும் மேலும் ஒரு வாக்கை ஜே.வி.பியின் அனுரகுமார திஸநாயக்காவுக்கு பெற்றுக் கொடுத்த



வில்லை. சஜித்துக்காவது திரும்பவில்லை. பழையபடி அதே கட்சிகள், அதே அரசியல் முறைகளிலும் சித்தாந்தங்களிலும் அதிகாரத்தில் அமர்ந்துள்ளன. நாட்டைப் பொருளாதாரப் படுகுழியில் இருந்து மீட்க அவர்கள் எல்லோருமே காலிமுகத்திடல் போராளிகள் கூட ஒற்றுமையாக இயங்குவார்கள், ஒற்றை ஆட்சியை தக்க வைப்பதிலும் அவர்கள் அப்படியே கூட்டுறவில் இருப்பார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

**தீவிர இடதுசாரித் தலைமைகள்**

இந்தப் பதிவினிடையே 1971ஆம் ஆண்டிலிருந்து ஜே.வி.பி. பற்றியும் மிதவாத இடதுசாரிகளை அறிந்தவர்களும் என்னோடு பேசிய போது, அந்த நாள்களில் சில தமிழ் மக்கள் ஜே.வி.பியுடன் உறவுகள், தொடர்புகள் வைத்திருந்தார்கள், இப்பொழுது கூட வைத்திருக்கிறார்கள், காலிமுகத் திடல் போராட்டங்களில் இணைந்தார்கள், சோலிஸ்ட் முன்னணியில் பேச்சாளர்களாக பல இளம் தமிழ் பெண்மணிகள் முன்வந்து பேசிய பல காணொலிகள் வெளிவந்தன எனக் கேட்டு இவர்களுடன் தமிழ் இளைய சமுதாயம் சேர்ந்து, பழமையை விட்டு, ஒரு புதிய யுகத்துக்குப் போனால் என்ன என்று வினாவினார்கள்.

தமிழ் மக்களின் அபிலாசைகளும் அவற்றின் எதிர்காலங்களும் அவர்களின் (தமிழர்களின்) கைகளில் தான் தங்கி உள்ளன.

தயிர் கேட்டுப் போகிறவனுக்குப் பாலைக் கொடுத்து உறை போட்டுத் தயிரை எடுத்துக் கொள் என்றும் சொல்லலாம். அல்லது நெய்க்கு அலைபவனுக்கும் பாலைக் கொடுத்து இதில் நெய் இருக்கிறது, எடுத்துக்கொள் எனவும் சொல்லலாம். தேடுபவனுக்குத்தான் எதனைத் தேடுகிறேன் என்பது தெளிவில் இருக்கும். இருந்தால் எதைக் கேட்க வேண்டும் என்ற புரிதல் இருக்கும். பாலைச் செலுத்தி வியாபாரம் பண்ண வருபவனுக்கு எந்தப்வ்பதில் சொல்வது என்ற கெட்டித்தனம் இருக்கும். அதை விடுத்து, அந்தத் தெளிவோ பக்குவமோ இல்லாமல் எவர் எவரோடு சேர்வது, எப்படிச் செய்வது என்று அங்கலாய்த்தால் கருமங்கள் ஆவதில்லை. செய்ய வேண்டியவை எவை என்பது தெரிந்து, அந்த அட்டவணைகளில் முன்னேறினால் முடிவுகள் நோக்கித் தீர்மானமாக நடைபோடலாம்.

கண்ணதாசனின் அருமையான தத்துவப் பாடல் சௌந்தராஜன் உணர்ந்து பாடியது ஒன்று உண்டு. 'புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே! எங்கள் புருஷோத்தமன் புகழ் பாட வாருங்களே!!' என்று தொடக்க வரிகள். கண்ணதாசனிடம் 'ஏன் புல்லாங்குழல்களே! எங்கள் புருடோத்தமன் புகழைப் பாட வாருங்கள்!' என்று நேரடியாக எழுதவில்லை, மற்ற சரணங்களில் அப்படி இல்லையே, அது ஏதும் எதுகையா? எனக் கேட்டதற்கு அவர் பதில் தந்தார். 'அதுவல்ல. ஒரு தத்துவத்தைச் சுட்டிக் காட்டினேன்' என்றாராம்.

ஆண்டவனை அடைய, அவனைப் பக்தியோடு பாட ஒருவனுக்கு பக்குவம் வரவேண்டும். 'அப்பனே' என்று கண்ட இடத்தில் எல்லாம் விபூதி பூசுபவனுக்கும், தோப்புக்கரணம் போடுபவனுக்கும், அப்படி அலங்கரித்துக் கொண்டு திரிபவனுக்கும் அந்தப் பக்குவம் வந்து விடுவதில்லை. புல்லாங்குழலை மூங்கில்கள் தான் தந்தாலும் மூங்கிலால் இசை வாசிக்க முடியாது. அதேபோல் மக்கள் தங்களது இச்சைகளால் பலவற்றிலும் ஈடுபட்டு பக்குவப்படாதவர்களாக மூங்கில்களாகவே இருக்கிறார்கள். அந்த மூங்கில்கள் தாங்களும் பக்குவப்பட்டு தாங்கள் அந்தப் புல்லாங்குழல்கள் போல் புருடோத்தமனைப் பாட வர வேண்டும், பக்குவப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அப்படிச் சொல்லப்பட்டது என்பது அவர் விளக்கம்.

தமிழ் மக்களிடையேயிருந்து எத்தனையோ புல்லாங்குழல்கள் வந்து அவர்களின் இலட்சிய வேட்கைக்காக இசை மீட்டன. அவற்றில் பல அடித்து நொறுக்கி, வீதிகளிலும் நீர்நிலைகளிலும் எறியப்பட்டு விட்டன. எஞ்சியிருக்கும் புல்லாங்குழல்களோ அடுப்பங்கரைகளில் அடுப்பு ஊதுகின்றன. இவற்றைத் தந்த தமிழ் சமுதாயமும் தங்கள் இலட்சியங்களுக்காகப் பக்குவப்படாமல் மூங்கில்களாகவே நின்று கொண்டிருக்கின்றன. இவை வேதனைகள்.

அதை விடுத்துப் பக்குவங்கள் கொண்டு விட்டால் அவர்கள் போக வேண்டிய வழிகளைத் தெரிந்து கொள்வார்கள்.

ஜே.வி.பியில் தமிழர்கள் பங்கு பற்றித் தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்)